# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1639/13 - 2010 පෙබරවාරි 02 වැනි අඟහරුවාදා - 2010.02.02

*1639/13 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்**

*கட்டளை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 9 அ ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், 1987 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதிய 453/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தம்புள்ளை பிரதேச சபையின் அமைத்துருவாக்கம் சம்பந்தமான கட்டளையை, இக்கட்டளை மூலம்,*

*(1) அதன் அட்டவணையை நீக்கி அதற்குப் பதிலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் ;*

*(2) (அ) அதன் (4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "ஒன்பது பேர்" எனும் பதங்களை நீக்கி அதற்குப் பதிலாக "பதின்மூன்று பேர்" எனும் பதங்களை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*(ஆ) குறித்த திருத்தங்கள் 2011, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று விதித்துரைக்கின்றேன்.*

*ஜனக பண்டார தென்னக்கோன்,*
*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2010, பெப்புருவரி 2.*

**அட்டவணை**

*பகுதி I*

*மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :*

*(440) எம்புல்அம்பே, (440ஏ) எதாபெந்தீவெவ, (440 பி) கிறலகொல்ல, (440சீ) வவுல்அம்பே, (440டீ) வெலமிற்றியாவ, (441)லெனதொற வடக்கு, (441ஏ) பண்ணம்பிட்டிய, (441பி) லெனதொற தெற்கு, (441சி) கீரலெஸ்ந, (441டி) புவக்அத்தாவல, (442)*

நயாகும்புற, (442ஏ) வல்கம்வெவ, (443) களுன்தேவ பறணகம, (443ஏ) களுன்தாம அளுத்கம, (443 பி) அங்குணவெலபெலச, (446) பஹுள அறவுல, (446ஏ) யக்குராகல வடக்கு, (446பி) கலோகலஹுஎல, (446சீ) இஹுள எருவுல, (446டி) வெலன்கொல்ல, (446ஈ) யக்குராகல தெற்கு, (446 எவ்) வில்கத்த, (447) நிக்கவட்டவன, (447ஏ) வெவலவெவ, (448) கும்புக்கந்தன்வல, (449) கண்டலம, (450) பள்ளேகம, (450சீ) வெலிஹேன, (451) இனாமளுவ, (451ஏ) பெல்லன்னேஓய, (451பி) எற்றவறாஹேன, (451சி) றத்மல்கொட்டுவ, (452) பளுடாவ, (452ஏ) கிம்புஸ்ஸ, (452பி) ஏகொடவெவ, (452சி) பொத்தான, (453) அவுடங்காவ, (453ஏ) திகம்பதஹ,(453பி) நாகலவெவ, (453சீ) சியம்பலாவெவ, (454) கெடிகஸ்வலான, (455) சீகிரிய, (455ஏ) தல்கொட்டே, (455பீ) பொல்அத்தாவ, (455சீ) பிதுறங்கல, (455டீ) மயிலத்தாவ,

## பகுதி II

**தம்புள்ளை பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் :**

*வடக்கு :*

வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் பொது எல்லையில் அமைந்துள்ள இனாமளுவ மலை உச்சியில் இருந்து வடக்கு நோக்கி 800 மீற்றர் செல்லும்போது சந்திக்கும் மேலே குறிப்பிடப்பட்ட மாகாண எல்லையின் புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களை பிரிக்கும் புள்ளி வரையும் (அதாவது நம்படகல வரையும்) அங்கிருந்து வடமத்திய, மத்திய மாகாணங்களின், பொது எல்லை வழியே கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் கிரிஓயாவின் மத்திய புள்ளி வரையும் அங்கிருந்து கிழக்கு நோக்கி வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் பொது எல்லை வழியே 4800 மீற்றர் வரையும் ;

*கிழக்கு :*

மேலே இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் பொது எல்லை வழியே தெற்கு நோக்கி திரும்பி கீரட்ஓயாவின் அணைக்கட்டை சந்திக்கும் புள்ளி வரையும் ;

*தெற்கு :*

மேலே கூறப்பட்ட இறுதி புள்ளியிலிருந்து 800 மீற்றர் ஹீரட்ஓயா வழியே வடமேற்கு நோக்கி சென்று, அங்கிருந்து வடமத்திய மற்றும் மத்திய மாகாண பொது எல்லை வழியே மேற்கு நோக்கி 1600 மீற்றரும் அங்கிருந்து வடக்கு நோக்கி 800 மீற்றரும் அங்கிருந்து தென்மேற்கு நோக்கி ஹந்துபடயாய மலை உச்சிக்கும் மேலாக 8000 மீற்றர் செல்லும் போது சந்திக்கும் வெகிகல மலை உச்சிக்கு மேலாகச் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி கெதரகல்பத்தனதலை உச்சி வரையும், அங்கிருந்து முறையே உடகாடுவ சேருதண்டாபொல, கரவிலஹேன, நிக்குல, உஸ்அத்தாவ ஆகிய கிராமங்களில் எல்லைக் கற்கள் இடப்பட்டு வேறாக்கப்பட்டுள்ள வட கிராம எல்லைகள் வழியே மல ஓயா மத்திய புள்ளி வரையும் ;

*மேற்கு :*

மேலே குறிப்பிடப்பட்ட இறுதி புள்ளியிலிருந்து அந்த ஓயாவின் வழியே வடக்கு நோக்கி 4800 மீற்றர் செல்லும்போது சந்திக்கும் (எல்லைக் கற்கள் இடப்பட்ட) பகலவெவ கிராம எல்லையைச் சந்தித்து அங்கிருந்து முறையே பகலவெவ, தலக்கிரியாகம கிழக்கு (எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட) கிராம எல்லை வழியே சென்று தம்புலுஓயாவின் மத்திய புள்ளியைச் சந்தித்து அந்த இறுதிப் புள்ளியிலிருந்து தம்புலு ஓயாவின் மத்திய கோட்டின் வழியே தென்கிழக்கு நோக்கி சென்று சந்திக்கும் 100 ஏக்கர் வீதி மற்றும் அம்புல்அம்பே எல்லையைக் கடந்து மீண்டும் தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே தென்கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் மாத்தளை – தம்புள்ளை பிரதான வீதியின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து மீண்டும் தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே தென்கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் கீரலஸ்ச மற்றும் அம்புல்அம்பே கிராமங்களின் எல்லைகளைச் சந்திக்கின்ற மெதமுல்ல கால்வாய் வரையும் அங்கிருந்து மெதமுல்ல கால்வாய் மத்திய கோட்டின் வழியே கிழக்கு நோக்கி செல்லும் போது சந்திக்கும் லக்கி காமினி சேனாநாயக்க உரிமைகோரும் தியபுபுலுவத்தை மற்றும் மரவணாகொட உரிமைகோரும் எம்பிஎஸ் வத்தை பொது எல்லை வழியே வடக்கு நோக்கிச் செல்லும் போது சந்திக்கும் தம்புலுஓயா – களுந்தாவ வீதியின் மத்திய கோட்டிற்கு வந்து மீண்டும் அந்த வீதி வழியே கிழக்கு நோக்கி செல்லும் போது சந்திக்கும் பள்ளியகுரு உரிமைகோரும் நடுக்காரவத்தை, மரவணாகொட உரிமைகோரும் எம்பிஎஸ் வத்தை பொது எல்லை வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் காலோகஹுஎல – கீரலெஸ்ச கிராம எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள எல்லைக்கு வந்து அங்கிருந்து அந்த எல்லை வழியே மேற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் பிம்தம்புர, கிரலெஸ்ச, காலோகஹுஅல கிராமங்களின் எல்லைகளைச் சந்திக்கும் இடம்வரையும் அங்கிருந்து பிம்தம்புர, காலோகலஅல கிராமங்களுக்கு எல்லைக் கற்கள் இடப்பட்டு பிரிக்கப்பட்டுள்ள எல்லைகள் வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் தித்தவல்கொல்ல,காலோகஹுஎல பொது கிராம எல்லை வரையும் அங்கிருந்து காலோகஹுஎல,தித்தவெல்லகொல்ல பொது எல்லை (எல்லைக் கற்கள் இடப்பட்ட எல்லை வழியே) வடக்கு நோக்கி செல்லும் போது சந்திக்கும் தித்தவெல்லகொல்ல ஏரியின் மத்திய கோடு வரையும் மீண்டும் அந்த ஏரியின் மத்திய கோட்டின் வழியே தித்தவெல்கொல்ல, காலோகஹுஎல எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ள பொது கிராம எல்லை வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும்

*தித்தவெல்கொல்ல யத்குராகல, காலோகஹஎல பொது கிராம எல்லைகளைச் சந்திக்கும் இடம் வரையும் அங்கிருந்து மீண்டும் ரத்மல்கஹஎல, யக்குராகல எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள கிராம எல்லை வழியே வடக்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் கால்வாய் வழியே வடகிழக்கு நோக்கி சந்திக்கும் யக்குராவல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே தம்புள்ளை – கண்டலம வீதியின் மத்திய கோட்டை ஊடறுத்து மீண்டும் யக்குராவல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கித் தம்புளை – கண்டலம வீதியை ஊடறுத்துச் சென்று மீண்டும் யக்குராவல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே யகரோகல – கண்டலம கிராம எல்லைகளைச் சந்திக்கும் இடம் வரையும் அங்கிருந்து எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட கண்டலம ரத்மல்கஹஎல கிராமங்களின் வழியே சென்று மீண்டும் பனுகல்கொடஓயா யக்குராகல ஓயாவுடன் கலக்கும் புள்ளியை அடைந்து அங்கிருந்து யக்குராகல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் மிரிஸ்கோணி ஓயாவின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து மிரிஸ்கோணி ஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடகிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் கண்டலம கிராம எல்லை வரையும் அங்கிருந்து எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள பெல்வெஹெர, கண்டலம கிராம எல்லைகளின் வழியே வடமேற்கு நோக்கி சென்று மஹவலி நீரோடையை ஊடறுத்துச் சென்று மீண்டும் எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள பெல்வெஹெர, இனாமலுவ கிராம எல்லைகள் வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் எண்டேருகல பன்சல சந்தி ஊடாக தம்புள்ளை – திருகோணமலை வீதியின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து அந்த வீதியின் தென்மேற்கு நோக்கி மத்திய கோட்டின் வழியே செல்லும்போது சந்திக்கும் சேருகஸகாய வீதியின் மத்திய கோட்டின் வழியே மேற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் பிரதேச சபை வீதியில் தெற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் மஹவலி நீரோடையை ஊடறுத்து நந்தெனிவெவ குளக்கட்டை ஊடறுத்து நந்தெனி கால்வாயின் மத்திய கோட்டின் வழியே தெற்கே, மேற்கே செல்லும்போது சந்திக்கும் கெஎல வரையும் அங்கிருந்து கெஎல வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் மஹவலி நீரோடையின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கி 2700 மீற்றர் செல்லும்போது புலாகல கிராமத்தின் வடஎல்லை வழியே மேற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் வடமத்தி, மத்திய மாகாணங்களின் எல்லை வரை சென்று மீண்டும் அநுராதபுரம், மாத்தறை மாவட்ட எல்லைகள் வழியே கிழக்கு நோக்கி மற்றும் வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் இனாமலுவ மலை உச்சியின் ஆரம்பப் புள்ளி வரையுமாகும்.*

*2-380/1*

---

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

*கட்டளை*

*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இக்கட்டளையின் மூலம் –*

*(1) இதற்கான அட்டவணையின் I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பை அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்கென மாநகர சபை பிரதேசமொன்றாக வெளிப்படுத்துகின்றேன் ;*

*(2) குறித்த மாநகர சபை பிரதேசத்தின் எல்லைகள் அட்டவணையின் II ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளாகவிருத்தல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன் ;*

*(3) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாநகர சபைக்கு பின்வரும் பெயரையும், பதவிப்பெயரையும் குறித்தொதுக்குகின்றேன் ;*

*"தம்புள்ளை மாநகர சபை"*

*(4) தம்புள்ளை மாநகர சபையானது, நகர முதல்வரையும், பிரதி நகர முதல்வரையும் வேறு பதின்மூன்று உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்று விதித்துரைக்கின்றேன் ;*

*(5) தம்புள்ளை மாநகர சபையின் பதவிக்காலம் ஆரம்பமாகவேண்டிய திகதியாக 2011, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியையும் நிர்ணயிக்கின்றேன்.*

*ஜனக பண்டார தென்னக்கோன்,*
*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2010, பெப்புருவரி 2.*

**அட்டவணை**

*பகுதி I*

*மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :*

*(444) தித்தவெல்கொல்ல (444ஏ) கப்புவத்தை, (444பி) மொரகொல்லாவ, (445) தம்புள்ளை நகரம், (445ஏ) ரத்மல்கஹஅல, (445பி) பெஹோறன்வெவ, (445சி) அத்துபரயாய, (445டி) பஹலவெவ, (445ஈ) ஹளுஅப்புள்ளனவெவ, (445எவ்) தம்புலுகம, (445 ஜீ) யாப்பாகம, (450ஏ) பல்வெஹர, (450பி) பூலாகல.*

*பகுதி II*

***தம்புள்ளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் எல்லைகளின் அட்டவணை*** :

*வடக்கு :*

*வடமத்திய, மத்திய மாகாணங்களின் பொது எல்லை தம்புலு ஓயாவின் மத்திய கோட்டை ஊடறுக்கும் புள்ளியிலிருந்து எல்லைக் கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள வடமத்திய, மத்திய மாகாண பொது எல்லையூடாக கிழக்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் மிரிஸ்கோணி ஓயாவின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து மிரிஸ்கோணி ஓயாவின் மத்திய கோட்டின் ஊடாக வடமேற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் ஹிங்குறுவெல்பிட்டிய மற்றும் பஹல பூலாகல கிராமங்களின் எல்லைகள் வரையும், அங்கிருந்து வடகிழக்கு நோக்கி மாகாண எல்லையினூடாக தம்புள்ளை அநுராதபுரம் பிரதான வீதியை ஊடறுத்துச் சென்று அங்கிருந்து மாகாண எல்லைகளினூடாக வடகிழக்கு நோக்கி 1700 மீற்றர் சென்று மீண்டும் பூலாகல கிராமத்தின் வட எல்லையூடாகக் கிழக்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் மகாவலி நீரோடை வழியே தென்கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் கெத்எல ஊடாக தெற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் றந்தெனிஎல மத்திய கோட்டிற்கு வந்து றந்தெனிஎல மத்திய கோட்டின் வழியே கிழக்கு நோக்கிச் சென்று மீண்டும் அந்த கால்வாய் வழியே வடகிழக்கு நோக்கி சந்திக்கும் றந்தெனி குளத்தின் குளக்கட்டுவரை சென்று குளக்கட்டின் ஊடாக ஊடறுத்துச் சென்று மகாவலி நீரோடை வழியே தென்கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் பிரதேச சபை வீதியின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் சேருகஸ்யாய வீதியின் மத்திய கோட்டின் ஊடாக கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் தம்புள்ளை திருகோணமலை வீதியின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து தம்புள்ளை – திருகோணமலை வீதியின் மத்திய கோட்டின் வழியே வடகிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் என்டரகல பன்சல சந்தியில் சந்திக்கும் இனாமளுவ கோறளே இம வரையும் அங்கிருந்து எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட இ. கி. வ. 418 இனாமளுவ மற்றும் இ. கி. வ. 421 பெல்வெஹெர பொது எல்லையூடாக தெற்கு நோக்கி சென்று மஹாலி நீரோடையை ஊடறுத்துச் சென்று மீண்டும் இ. கி. வ. 420 கண்டலம மற்றும் இ. கி. வ. 421 பெல்வெஹெர எல்லைக் கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பொது எல்லை ஊடாக தெற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் கண்டலம மற்றும் பெல்வெஹெர கிராமங்களின் எல்லையானமிரிஸ்கோணி ஓயாவின் மத்திய கோடு வரையும் ;*

*கிழக்கு :*

*பெல்வெஹெர மற்றும் கண்டலம பொது எல்லையூடாக செல்லும்போது சந்திக்கும் மிரிஸ்கோணிஓயா மத்திய கோட்டின் வழியே தென்மேற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் யக்குராகல ஓயாவின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து யக்குராகல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே தெற்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் பனுகல்கொட ஓயா யக்குராகல ஓயாவுடன் கலக்கும் இடம் வரையும் அங்கிருந்து இ. கி. வ. 420 கண்டலம, இ. கி. வ. 424 ரத்மல்கஹஅல மற்றும் யக்குராகல கிராமங்களின் எல்லைகள் ஊடாக தெற்கு நோக்கி செல்லும்போது மீண்டும் சந்திக்கும்போது யக்குராகல ஓயாவின் மத்திய கோட்டின் வழியே தம்புள்ளை – கண்டலம பிரதான வீதியின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து யக்குராகல ஓயா மத்திய கோட்டின் வழியே மீண்டும் தெற்கு நோக்கி செல்லும் போது சந்திக்கும் கால்வாய் வழியே தென்கிழக்கு நோக்கி செல்லும்போது சந்திக்கும் யக்குராகல, ரத்மலகஹஎல கிராமங்களின் பொது எல்லையில் எல்லைக்கற்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட கிராம எல்லை ஊடாகத் தெற்கு நோக்கிச் செல்லும்போது தித்தவெல்கொல்ல, தத்மல்கஹஎல கிராமங்களின் தெற்கு எல்லையின் முடிவு வரையும் அங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் தித்தவெல்கொல்ல ஏரியின் மத்திய கோட்டினூடாகச் செல்லும்போது சந்திக்கும் கலோகஹஎல/பிம்தம்புர பொது கிராம எல்லைகளின் வழியே தெற்கு நோக்கிச் செல்லும்போது பிம்மதம்புர/கலோகஹஎல மற்றும் கீரலெஸ்ஸ கிராம எல்லைகள் வரை செல்லும்போது சந்திக்கும் கீரலெஸ்ஸ, கலோகஹ கால்வாயின் எல்லைக்கற்கள் இடப்பட்ட பொது எல்லைகள் வழியே கிழக்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் பள்ளியகுரு உரிமைகோரும் நடுக்காரவத்த மற்றும் மரவனாகொட உரிமைகோரும் எம்பிஎஸ் வத்தை பொது எல்லை வழியே தெற்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் தம்புலு ஓயாவிலிருந்து களுந்தேவ வரையான வீதியின் மத்தியகோடு வரையும் ;*

*தெற்கு :*

*பிம்தம்புர/கலோகஹஎல மற்றும் கீரலெஸ்ஸ பொது எல்லையின் வடக்கின் முடிவுப் பகுதியின் (களுந்தாவ வீதியின் மத்திய கோட்டிலிருந்து) மேற்கு நோக்கி அந்த வீதி ஊடாகச் செல்லும்போது சந்திக்கும் லக்கி காமினி சேனாநாயக்க உரிமைகோரும் தியபுபுலவத்தை மற்றும் மரவணாகொட உரிமைகோரும் எம்பிஎஸ்வத்தை பொது எல்லை வழியே தெற்கு நோக்கி செல்லும் போது சந்திக்கும் மெதமுல்ல கால்வாயின் மத்திய கோடு வரையும் அங்கிருந்து மெதமுல்ல கால்வாய் வழியே தம்புலுஓயா வரையும் அங்கிருந்து தம்புலு ஓயாவின் மத்திய கோட்டின் வழியே மாத்தளை தம்புள்ளை பிரதான வீதியின் மத்திய கோடு வரையும் (தம்புளு ஓயா பாலம்) அங்கிருந்து தம்புலு ஓயா மத்திய கோட்டின் வழியே செல்லும்போது 100 ஏக்கர் வீதியை சந்திக்கும் இடமான அம்புல்அம்பே மற்றும் கப்புவத்தை கிராமங்களின் எல்லைகளை சந்திக்கும் இடம் வரையும் ;*

*மேற்கு :*

*கப்புவத்தை மற்றும் அம்புல்அம்பே கிராமங்களின்பொது எல்லையான தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே அம்புல்அம்பே மற்றும் தளகிரியாகம கிராமங்களின் பொது எல்லை வரையும், அங்கிருந்து தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடமேற்கு நோக்கி இப்பன்கட்டுவ நீர்த்தேக்கம் வரையும், இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்தில் பழைய தம்புலுஓயா பழைய வலமிற்றி ஓயாவைச் சந்திக்கும் இடம் வரையும் அங்கிருந்து இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்தில் பழைய தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கி துபாறே மற்றும் தண்டுபெந்திருப்ப கிராமங்களின் எல்லைகளைச் சந்திக்கும் இடம் வரையும் அங்கிருந்து இப்பன்கட்டு நீர்த்தேக்கத்தில் பழைய தம்புலுஓயாவின் மத்திய கோட்டின் வழியே தண்டுபெந்திருப்ப மற்றும் ஆனகட்டாவெவ கிராமத்தின் பொது எல்லையான வடமத்திய மாகாண மத்திய மாகாண எல்லை வரையும் அங்கிருந்து இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்திற்குள் பழைய தம்புலுஓயா மத்திய கோட்டின் வழியே வடமத்திய, மத்திய மாகாண எல்லைகள் வழியே வடக்கு நோக்கி சென்று தம்புலுஓயா நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டின் வழியே சென்று மீண்டும் தம்புலுஓயா மத்திய கோட்டின் மீதான வடமத்திய, மத்திய மாகாண எல்லைகள் வழியே வடக்கு நோக்கி ஆனகட்டாவெவ மற்றும் ஹிங்குறுவெல்பிட்டிய கிராம எல்லைகளைச் சந்திக்கும் இடம் வரையுமாகும்.*

*2- 380/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.